# CAMPAIGN AGAINST CAMP COOLIE SYSTEM (CACCS)

## அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

## 2014 பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு ஒரு வேண்டுகோள்! சுமங்கலித் திட்டத்தால் பாதிக்கப்பட்ட வளர் இளம் பெண்களின் உரிமைக்கான தேர்தல் அறிக்கையில் இடம் பெறட்டும்!

சுமங்கலி திட்டம் என்ற கேம்ப்கூலி முறையில் (Camp Coolie System) தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் வசிக்கும் கிராமப்புற ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வளர் இளம் பருவ பெண்கள் தங்களின் பள்ளிப் படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு, கொத்தடிமைகளாக வேலை செய்து வருகின்றனர். சுமங்கலித் திட்டம், என்ற கவர்ச்சி திட்டத்தை நம்பி பஞ்சாலை மற்றும் ஆடை உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு புரோக்கர்கள் மூலம் ஆயிரக்கணக்கான கிராமப்புற ஏழை எளிய வளர் இளம் பெண்கள் இழுத்துவரப்படுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் 18 வயதிற்கும் குறைவான குழந்தைத் தொழிலாளர்களாகவே உள்ளனர். ஆசைவார்த்தை காட்டி பஞ்சாலைகளில் சேர்க்கப்படும் இப்பெண்கள் உழைப்பு மற்றும் பாலியல் சுரண்டல்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

தமிழ்நாட்டில் விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியாக கிராமப்புறபெண்கள் பெருமளவில் வேலை செய்யும் துறையாக பஞ்சாலை, ஆடை உற்பத்தி தொழில்துறையை குறிப்பிடலாம். தமிழ்நாட்டை பொருத்தவரை திருப்பூர், கோவை, ஈரோடு, திண்டுக்கல், சேலம் ஆகிய 5 மாவட்டங்களில் இந்த துறைசார்ந்த தொழில்சாலைகள் குவிந்து கிடக்கின்றன. தமிழ்நாட்டில் சுமார் 3800 பஞ்சாலை மற்றும் ஆடைஉற்பத்தி தொழில்சாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் ஏறக்குறைய 5.5 லட்சம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இதில் 60 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் பெண் தொழிலாளர் என்பது கவனத்தில் கொள்ளப்ட வேண்டும்.

இந்த தொழிற்சாலைகளில் கேம்ப்கூலி திட்டம், மாங்கல்ய திட்டம், திருமகள் திருமணத் திட்டம் என்ற பல்வேறு பெயர்களில் தமிழகத்தின் தென்மாவட்டங்களை சேர்ந்த சுமார் 2 லட்சம் வளர்இளம் பருவபெண்கள் 3 முதல் 5 ஆண்டுகள் வரை ஒப்பந்த அடிப்படையில் வேலையில் சேர்க்கப் பட்டுள்ளனர். இத்தகைய தொழிற்சாலைகளுக்கு துணை நிற்கும் தொழிற்சாலைகள் என்று திருப்பூர் மாநாகரில் மட்டும் 7500 சிறிய மற்றும் நடுத்தர அளவிளான தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

இத்தகைய தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண்களுக்கு மிகக்குறைந்த ஊதியம், கல்வி மறுப்பு, கூடுதல் வேலைப்பளு, பாலியல் தொல்லைகள், மனரீதியான பிரச்சனைகள், உடல் சார்ந்த பிரச்சனைகள், என எண்ணற்ற பிரச்சனைகள் சந்தித்து வருகின்றனர். இதனால் இந்த இளம்பெண்களின் வாழ்க்கை கேள்விக்குறியாவதோடு, சமூகம் சார்ந்த பல பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிய ஆபத்தில் இருந்துவருகின்றனர். எனவே இந்த முக்கியமான பிரச்சனையில் அரசியல் கட்சிகளும், அரசியல் பங்கேற்பாளர்களும் கவனம் செலுத்தி **பெணகள்உரிமை, குழந்தைகள் உரிமை, தொழிலாளர் உரிமை, மனித உரிமைகள்** என்ற நோக்கத்தில் இதை அணுகிட வேண்டுகிறோம்.

அத்தோடு அரசின் கொள்கை அளவிலும் சில மாற்றங்களைச் செய்தாக வேண்டும். அப்படி செய்வதன் மூலம் இப்பிரச்சனையில் மாற்றத்தை உருவாக்கி முறையான தொழில்வளர்ச்சியை உறுதிசெய்து, தொழிலாளர் உரிமைகளையும் பாதுகாத்திட முடியும்.

நமது நடுவண் அரசு 18 வயதுவரை உள்ள அனைவரையும் குழந்தைகளாக அறிவித்து இவர்கள் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தப்படுவதை தடுத்து நிறுத்தி, இவர்களுக்கு தரமான இலவச கட்டாயக் கல்வியை உறுதி செய்திடவேண்டும்.

40-க்கும் மேற்பட்ட இந்திய தொழிலாளர் சட்டங்கள் இருந்த போதிலும், நடைமுறையில் இவற்றின் அமலாக்கம் கேள்விக் குறியாகவே இருந்து வருகிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் இயங்கும் பஞ்சாலை மற்றும் ஆடைஉற்பத்தி தொழிற்சாலைகள் அனைத்தும் ஒரு சிறப்பு பொருளாதார மண்டலத்தை போல எவரும் கேள்வி கேட்க முடியாத நிலை இருந்து வருகிறது. வரவிருக்கும் பாராளுமன்ற தேர்தலில் சுமங்கலித் திட்டத்தால் பாதிக்கப்படும் வளர் இளம் பெண்களின் மறுவாழ்வு மேம்பாடு குறித்த விஷயங்களை பேசப்பட வேண்டும். **அனைத்து அரசியல் கட்சிகளும் தங்களுடைய தேர்தல் அறிக்கையில் இப்பிரச்சனை தொடர்பான கீழ்கண்ட கோரிக்கைகளை அரசியல் கோரிக்கைகளாக மாற்றி இடம்பெற செய்ய வேண்டுமென முகாம் கூலி முறைக்கு எதிரான பிரச்சார இயக்கம் சார்பாக பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.**

**எமது கோரிக்கைகள் : -**

1. 18 வயதுவரை அனைவரையும் குழந்தைகளாக அறிவித்து, குழந்தைகளுக்கான அனைத்து சட்டங்களிலும் 18 வயதை உறுதிசெய்யும் கொள்கை முடிவை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். 18 வயது வரை அனைவருக்கும் தரமான இலவச கட்டாயக் கல்வியை உறுதிசெய்து, இளம் வயதில் பள்ளியில் இடைநின்று பஞ்சாலை மற்றும் ஆடை உற்பத்தி தொழிற்சாலைகளில் சுமங்கலித் திட்டம் போன்ற கொத்தடிமை முறைகளில் வேலையில் அமர்த்தப்படுவதை அரசு தீவிர கண்காணிப்பு செய்து முற்றிலும் தடைசெய்ய வேண்டும்.

2. தொழிலாளர் நலச்சட்டம் 18(1) ஐப் பயன்படுத்தி பஞ்சாலை மற்றும் ஆடை உற்பத்தி தொழிற்சாலை முதலாளிகள் சுமங்கலித் திட்டம், மாங்கல்யத் திட்டம் என்ற கேம்ப் கூலி முறைகளை நடைமுறைப்படுத்தி வருவது வேதனை அளிக்கிறது. எனவே இச்சட்டம் 18(1) விதியை நிரந்தர தொழிலாளர்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற புதிய விதித்திருத்தம் கொண்டுவர வேண்டுமென அரசியல்கட்சிகள் நடுவண் அரசை வற்புறுத்த வேண்டும். 18(1) ன் கீழ் தொழிலாளிகளுக்கும், முதலாளிக்கும் இடையே போடப்படும் ஒப்பந்த நகல்களை தொழிலாளர்களுக்கும், தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் கட்டாயம் வழங்க வேண்டும். சுமங்கலித் திட்டம் என்ற பெயரிலோ அல்லது வேறு எந்த பெயரிலோ 3 முதல் 5 ஆண்டுகால ஒப்பந்த பத்திரத்தில் பணியாளாரிடமும், அவரது பெற்றோர்களிடமும் கையெழுத்து வாங்கப்படுகிறது. அந்த ஒப்பந்த பத்திரத்திரத்தின் நகல்களை ஆலை நிர்வாகமே வைத்துக்கொள்கிறது. இதை தவிர்த்து ஒப்பந்தம் செய்து கொள்ளும் தொழிலாளிக்கும், தொழிற் சங்கப் பிரதிநிதிகளும், இந்த ஒப்பந்த நகல்கள் கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

3. தொழிற்பழகுநர் சட்டம் 1963 ன் படி தொழிற்சாலைகளில் 10 சதவீதத்திற்கும் உள்ளாகவே தொழிற்பழகுநர்கள் இருக்க வேண்டும் பஞ்சாலை மற்றும் ஆடைஉற்பத்தி தொழிற்சாலைகளில் 80 விழுக்காட்டிற்கும் அதிகமாக தொழிற்பழகுநர்களை வைத்தே ஆலைகளை இயக்கும் போக்கு நடைபெறுகிறது. எனவே 10 சதவீதத்திற்கு மேல் எந்த தொழிற்சாலைகளிலும் தொழிற்பழகுநர்கள் இருக்கக் கூடாது என்பதை கண்காணிப்பு செய்யவேண்டும். பெரும்பாலான மில்களில் தொழிற்பழகுநர் என்ற பெயரில் வேலைசெய்யும் காலம் முழுவதும் உழைப்பு சுரண்டல் நடைபெற்று வருகிறது.

4. தொழிற்சாலைச் சட்டம் 1948-ன் படி பஞ்சாலை மற்றும் ஆடைஉற்பத்தி தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை, பணிச்சேர்க்கை ஆணை, சம்பளச் சான்று, ESI அட்டை, காப்பீட்டு அட்டை போன்ற அனைத்து சான்றுகளும் வேலை செய்யும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் கட்டாயம் வழங்கப்பட வேண்டும். இந்த அட்டைகளை தொழிலாளர்கள் தொழிற்சாலைகளிலும், தொழிற்சாலைகளை விட்டு வெளியே செல்லும்போதும் தாங்கள் வசம் வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

5. தொழிலாளர் விடுதிகளுக்கான நன்நடத்தை விதிகளை அரசு உருவாக்க வேண்டும். இவ்விடுதிகள் அனைத்தும் சமூக நலத்துறையால் கண்காணிக்கப்பட வேண்டும். இதுதவிர 50 மேற்பட்ட பெண்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் மருத்துவ செவிலியர்கள், குழந்தைகள் பராமரிப்பு மையம் போன்றவை இருப்பதை சமூக நல்த்துறை உறுதிசெய்திட வேண்டும்.

6. நாள் ஒன்றுக்கு 8 மணிநேரம் வேலை, கூடுதல் வேலைக்கு (OT) இரட்டைசம்பளம், கட்டாயப்படுத்தி வேலை வாங்குவதை தவிர்ப்பது, வேலையில் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குவது, பணியின்போது வாழைப்பழம், கருப்பட்டி போன்ற உணவுகளை வழங்குவது, உணவிற்கு 1 மணிநேர இடைவெளி ஒதுக்குவது, மகப்பேறு சட்டத்தின் கீழ் பெண்களுக்கு சம்பளத்துடன் கூடிய 6 மாத மகப்பேறு விடுப்பு, எண்ணிக்கைக்கு ஏற்ப சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் போன்றவற்றை கட்டாயம் தொழிற்சாலைகள் செய்து கொடுக்க வேண்டும்.

7. 18 வயதிற்கும் மேற்பட்ட இளம் பெண் தொழிலாளர்கள் இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் பஞ்சாலைகளிலோ, நூற்பாலைகளிலோ வேலை செய்திருந்ததால் நிரந்திரத் தொழிலாளர் தகுதி றுதிச்சட்டம் 1981-ன்படி அவர்களை நிரந்திரத் தொழிலாளர்களாக முறைப்படுத்திட தொழிலாளர் நலத்துறை உரிய வழிமுறைகளை செய்துதர வேண்டும்.

8. பஞ்சாலை பயிற்சியாளர்களுக்கு ஏற்கனவே அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச கூலியை வழங்கிடவும், வேலையாள் இழப்பீட்டுச் சட்டம் 1923, தொழிற் தகராறுச்சட்டம் 1947, வருங்கால வைப்பு நிதிச்சட்டம் 1952, போனஸ் வழங்குதல் சட்டம் 1965, தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டம் (ESI) 1948, போன்ற தொழிலாளர் நலச் சட்டங்களின் படி கிடைக்கவேண்டிய போனஸ் தொகை, விபத்துக் காப்பீடு, சம்பளத்துடன் கூடிய விடுப்பு, வாராந்திர விடுமுறை போன்ற

பலன்களை இத்திட்டத்தின் கீழ் வேலை செய்யும் அனைத்து இளம் பெண் தொழிலாளர்களுக்கும் வழங்க தொழிலாளர் நலத்துறை உரிய ஏற்பாடுகளை முறையாகச் செய்ய வேண்டும்.

9. தொழிற்சாலையில் பணியின் போது விபத்துக்கள் நேரிட்டால் உடனடியாக அந்த தொழிற்சாலை எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்தில் முறையாக அதற்கான முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட வேண்டும். அத்தோடு வேலையாள் இழப்பீட்டு சட்டம் 1923 ன் படி தொழிலாளர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும். அவ்வப்போது பஞ்சாலைகள் மற்றும் நூற்பாலைகளில் ஏற்பட்டுவரும் மரணங்கள், விபத்துக்கள் தற்கொலைகள் என்று மூடிமறைக்கப்படுகின்றன. எனவே, இதை அரசு தானே முன்வந்து விசாரித்து உண்மை நிலை கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

10. பஞ்சாலைகளில் தொழிற்சாலை சட்டம் 1948-ன் படி குறைதீர்க்கும் குழு (Grievance committee or internal complaint committee), anti harassment committee, சுகாராத மற்றும் பாதுகாப்புக் குழு (health and safety committee), உணவுக்குழு (canteen committee ஆகியவை செயல்பாட்டில் உள்ளதா என கண்காணித்து வேண்டும்.

11. தமிழ் நாட்டில் இயங்கும் National textile Corporation (NTC)ல் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்து உரிமைகளும். சலுகைகளும். இதர தனியார் ஆலைகளிலும் பின்பற்றப்பட வேண்டும்.

12. தொழிற்சங்கச் சட்டம் 1926 ன் படி அரசின் பதிவு பெற்ற தொழிற் சங்கங்கள் செயல்படவும், கூட்டுச் சேர்ந்து பேரம் பேசுதல் சட்டப்படி தொழிலாளர்கள் , தொழிற்சாலை முதலாளிகள், அரசு தொழிலாளர் நலத்துறை பணியாளர்கள் இணைந்து பேரம் பேசுதல், மற்றும் பணியாளர் நிலையாணை சட்டம் 1946 ன் படி கம்பெனி நிலையாணை உருவாக்குதல், இதர தொழிலாளார்கள் நலன்களை உறுதி செய்தல் போன்றவை முறையாக கண்காணிக்கப்பட வேண்டும்.

13. நமது நாட்டில் 40 க்கும் மேற்பட்ட தொழிலாளர் நலச்சட்டங்கள் அமலில் இருந்து வருகிறன்றன. இவற்றில் பல சட்டங்கள் நடைமுறை சாத்தியமற்றவையாக இருப்பதால் தற்போது தொழில் வளர்ச்சி நடைமுறைக்கு ஏற்ப புதிய சட்டங்கள் இயற்ப்டுவதற்கான தேவையையும் நடைமுறையில் உள்ள சில சட்டங்களை மறுபரிசீலனை செய்து உரிய திருத்தங்கள் செய்யவும் அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

14. கிராமப்புற இளம் பெண்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக தமிழக அரசும், மத்திய அரசம் கொண்டுவந்துள்ள இளைஞர்களுக்கான ஆளுமைத்திறன் பயிற்சி போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் முழுமையாகவும் முறையாகவும் அவர்களைச் சென்றடைந்துள்ளதா என்பதை மத்திய, மாநில அரசுகள் கண்காணிக்க வேண்டும்.இது போன்று பாதிக்கப்படும் இளம் பெண்கள்

அரசு திட்டங்களின் மூலம் முழுமையாக பயன்பெறும் வகையில் இவற்றில் தேவைப்படும் சில மாற்றங்களை உடனடியாக கொண்டு வரவேண்டும்.

15. பஞ்சாலைகள் மற்றும் நூற்பாலைகளில் நடைபெறும் உரிமை மீறல்களைக் கண்காணிக்க மாவட்ட அளவிலான குழு ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் தமிழக அரசு உடனே நியமிக்கவேண்டும். இக்குழுக்களில் தொழிலாளர் மற்றும் குழந்தைகள் உரிமைகள், மகளிர் உரிமை போன்ற களங்களில் பணியாற்றும் குழுக்கள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை இடம்பெறச் செய்யவேண்டும். அனைத்துப் பஞ்சாலைகளையும் இக்குழுக்கள் ஆய்வு செய்து சுமங்கலித்திட்டத்தின் கீழ் வேலை செய்யும் இளம்பெண் தொழிலாளர் உரிமை மீறல்களை அவ்வப்போது கண்காணிக்க வேண்டும்.